**பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டத்தின் (வெளிவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்)- 2010.**

**1. அபிப்பிரயாம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுற்குகிணங்கவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் சொல்லப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 நிதிசார் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 5636.79 மில்லியனாக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 7,878.91 மில்லியன் தொகையாகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய

காட்டியது. மேலும் கொட்டாவையில் ஏ4 உள்ளக மாற்றத்தின் நிருமாணம் மீளாய்வாண்டின் இறுதியில் வேலைகளின் 49.91% பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், ஆண்டினிறுதியில் வேலைகளின் 37.17% ஆன முன்னேற்றத்தை மாத்திரமே காட்டியது.

(ஆ) கடுவெலையிலிருந்து கடவத்தை வரையான வீதி (கட்டம் - 02) மற்றும் கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய வரையான வீதி என்பவற்றின் நிருமாணத்திற்கான ஒப்பந்தங்கள் மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறும் கூட வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2.2 காணி சுவிகரிப்பு நடவடிக்கைகள்

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூன்று கட்டங்களின் கீழ் செயற்திட்டத்தால் காணிகளின் சுவீகரிப்பின் பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

**2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| | **சுவீகரிக்கப் பட்ட காணித் துண்டுகள்** | **இழப்பீடு செலுத்தப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை** | **இழப்பீட்டுக் கொடுப்பனவின் முன்னேற்றம்** | **செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|---|---|
| | | | % | **ரூபா மில்லியன்** |
| கொட்டாலை ± கடுவெல (கட்டம் 01) | 1066 | 844 | 79 | 1320.31 |
| கடுவெல ± கடவத்தை (கட்டம் - 02) | 1,188 | 343 | 26 | 908.46 |
| கடவத்தை ± கெரவலப்பிட்டிய (கட்டம் 02 -01) | 926 | 12 | 1.3 | 107.96 |
| | 3,180 | 1,199 | 31.7 | 2336.73 |

வைக்கப்பட்டிருந்தது. மிகுதியாக உள்ள காணித்துண்டுகளை விநியோகிப்பதற்குப் பொருத்தமான நபர்ளை தெரிவு செய்வதற்காக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.2.3 மீள் குடியேற்ற நடவடிக்கைகள்

செயற்திட்ட நடவடிக்கைகளால் இடம்யெர்ந்த நபர்களிற்கான மீள் குடியேற்ற நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டவாறு 2007 இல் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அதனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் காணிச் சுவிகரிப்பு மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக 2008,2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மேலதிக பதவியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கைகளின் படி, மீள் குடியேற்ற நோக்கத்திற்காக 6.417 கெக்ரேயர் காணி சுவீகரிக்கப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய நடவடிக்கைகளின் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

**2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| | மீள் குடியேற்ற நோக்கங்களிற்காக சுவீகரிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை | மீள் குடியேற்ற நடவடிக்கைகளின் முன்னேற்றம் % |
|---|---|---|---|
| கொட்டாவை ± கடுவெல (கட்டம் - 01) | 30 | 16 | 53 |
| கடுவெல ± கடவத்தை (கட்டம் - 02) | 39 | 12 | 31 |
| கடவத்தை ± கெரவலப்பிட்டிய (கட்டம் - 02 ± 1) | 57 | இல்லை | - |
| | 126 | 28 | 24 |